தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் , சென்னை – 06

ந.க.எண் 41582/டபிள்யு2/இ2/2023 நாள் 20.09.2023

பொருள் பள்ளிக்கல்வி 2023 – 2024 நான் முதல்வன் – பள்ளியளவிலான உயர்கல்வி வழிகாட்டி மையம் (Career Guidance Cell) – மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் பள்ளிகளுக்கு வருகை தந்த நாள்களுக்கு ஆறு நாள்களுக்கு மிகாமல் ஈடு செய்யும் விடுப்பு வழங்குதல் சார்ந்து.

பார்வை

1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் , ந.க.எண் 17597/CoSE/PC/2023, நாள் 06.05.2023
2. நேரடி நியமனம் பெற்ற முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் சங்க கோரிக்கைகள், நாள் 25.07.2023

**"நான் முதல்வன்"** திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளிகளில் அமைக்கப்படவிருக்கும் பள்ளி அளவிலான உயர்கல்வி வழிகாட்டல், ஆலோசனைக்குழு (Career Guidance Cell) 06.05.2023 முதல் செயல்படவுள்ளதாகவும், பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியான பின்னர், உயர்கல்வி சார்ந்த தகவல்கள், விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தல், கல்லூரிக் கட்டண ஏற்பாடுகள் என பல்வேறு உதவிகளை பள்ளிகளின் வாயிலாக செய்திட அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் உயர்கல்வி பயிற்சி பெற்ற முதுகலை ஆசிரியர்கள், 08.05.2023 முதல் குறைந்தது 2 பேர் சுழற்சி முறையில் பள்ளிக்கு வருகை தர வேண்டுமென்றும் , அவ்வாறு விடுமுறை நாள்களில் பள்ளிகளுக்கு வருகை புரிந்து மாணவர்களின் உயர்கல்விக்கு உதவும் அனைத்து முதுகலை ஆசிரியர்களுக்கும் அவர்கள் பணிபுரிந்த நாள்களுக்கு ஈடு செய்யும் விடுப்பு வழங்கப்படும் என பார்வை 1 இல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

பார்வை 2 இல் காணும், நேரடி நியமனம் பெற்ற முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் கோரிக்கையின் படியும், பார்வை 1 இல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறும் விடுமுறை நாள்களில் பள்ளிகளுக்கு வருகை புரிந்து, மாணவர்களின் உயர்கல்வி வழிகாட்டுதலுக்கு உதவிய அனைத்து முதுகலை ஆசிரியர்களுக்கும், அவர்கள் கோடை விடுமுறையில் பணிபுரிந்த நாள்களுக்கு மட்டும், அதிகபட்சமாக ஆறு நாள்களுக்கு மட்டும் ஈடு செய்யும் விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. மேலும் அவ்விடுப்பினை மொத்தமாக எடுக்காமல் அவ்வப்போது ஒரு நாள் வீதம், விதிகளின்படி 6 மாத கால அவகாசத்திற்குள் எடுக்க வேண்டுமென்றும் இது சார்ந்த ஈடுசெய் விடுப்பு ஏற்கனவே துய்க்கப்பட்டிருந்தால் அவ்விடுப்பு போக மீதமுள்ள நாள்களுக்கு மட்டும் விடுப்பு வழங்குமாறும் அனைத்து மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக்கல்வி இயக்குநருக்காக

20/9/2023

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

Scanned with CamScanner